1978 ஏப்ரல் 5] [திரு. துரைமுருகன்]

இந்த தலைப்பின் கீழ் செய்தி வெளியாகியிருக்கிறது. பத்திரிகை சுவரொட்டிகளிலும், பெரிய எழுத்துக்களில் வெளியிடப்பட்டிருக்கிறது இவற்றைமேலோட்டமாகப்பார்க்கிறயாருக்கும் என் மீதுதவறான எண்ணம்தான் ஏற்படும். மேலும் மாண்புமிகுகல்வியமைச்சர் திரு.அரங்கநாயகம் பேசும் போது ''இந்த இரண்டு தட்டுக்களும் இப்போது அந்தப் பள்ளியில் இல்லை. தட்டுகள் திருடப்பட்டிக்கின்றன'' என்று கூறியதும் வெளியாகியிருக்கிறது. மாண்புமிகு அவை முன்னவரும் அந்தப் பொருட்பட கூறியதாக செய்தி வெளிவந்திருக்கிறது. இவை அனைத்தும் எனக்குக் களங்கம் கற்பிக்கும் உள்நோக்கத்தோடும், திட்டமிட்டும் வேண்டுமென்றே கூறப்பட்டு வெளியிடப்பட்டவையாகும்.

ஓர் ஆதாரத்தை அவையில் காட்டும்போது அது எப்படி வந்தது என்று யாரும் வற்புறுத்த முடியாது. சட்டப்படி அதற்கு வழியில்லை. அதேபோன்று'' தட்டுகள் திருடப்பட்டன; ஆனால் துரைமுருகன் திருடினார் என்று கூறவில்லை' என்றுகூறுவதும் மறைமுகமாக என்னைக் குற்றம் சாட்டுவதாக அமையும். இவையெல்லாம் மாண்புமிகு அமைச்சர்களுக்கும் 'அண்ணு' நாளிதழுக்கும் மிக நன்ருகத் தெரியும். இருந்தும்என்மீது இத்தகைய களங்கத்தை திட்டமிட்டு ஏற்படுத்தியிருக்கிருர்கள். இது சட்டமன்றப் பேரவை உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய கடமையைச் செய்ய விடாமல் தடுக்கக்கூடியதாகவும், அவை உரிமையை மீறியதாகவும், அமைந்திருக்கிறது. எனவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சினை குறித்தும் என் தீர்ப்பு பின்னர் வழங்கப்படும்.

(ஈ) ஓர் உறுப்பினர் கூருததைக் கூறியதாக மெயில் நாளேடு செய்தி வெளியிட்டதாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு.கே. பண்ணை சேதுராம் அவர்கள் 'மெயில் நாளேட்டின் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டிருக்கிருர்கள். அவருக்கு என் அனுமதி அளிக்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 184-ன் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்ப அனுமதி கோருகிறேன். 1-4-1978-ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் இந்த நகராட்சிகள் திருத்த மசோதா மீது விவாதம் நடைபெற்றது. அப்போது விவாதத்தில் கலந்து கொண்டு நானும் எனது

கருத்துக்களைப் பேசி இருக்கிறேன். அப்போது பணக்காரர்கள் மட்டும்தான் நகராட்சித் தலைவர்களாக வர முடியும், ஏழைகளாக இருந்தால் வரமுடியாது, காரணம் நகராட்சிகளின் உறுப்பினர்கள் ஊர் கடத்தப்பட்டு வெள்ளைத்தாளில் கையெழுத்து வாங்கி ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுதிக் கொடுத்ததைப் படியுங்கள் அப்படியே.

திரு.கே.பண்ணை சேதுராம்: டிஸ்ட்ரிக்ட் முனிசிப்பாலிட்டீஸ் ஆக்டில், நேரடியாக தலைவர்களைத்தேர்ந்தெடுக்கிற முறையை ஆதரித்துப் பேசினேன். ஆனால் மெயில் பத்திரிகையில் நான் பேசிய பேச்சைப் போடுவதற்குப் பதிலாக நான் இங்கே பஞ்சாயத்து தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிற முறைப்பற்றி பேசியதாக போடப்பட்டிருக்கிறது. மெயில் பத்திரிகை ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. படித்தவர்கள் மத்தியில் அந்தப் பத்திரிகை ஒரு நல்ல இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆகவே படித்தவர்கள் நான் பேசாத கருத்துக்களைப் பேசியதாக படித்து என் மீது தவறுதலான ஒரு அபிப்பிராயத்தை உண்டுபண்ணுகிற அளவில் இருக்கிற காரணத்தால் இது அவை உரிமை மீறல் செயலாகும். எனவே இதை உரிமைக்குழுவிற்கு அனுப்பி வைக்க தீர்ப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இது குறித்தும் என் தீர்ப்பை பின்னர் வழங்குகிறேன்.

(உ) ஓர் உறுப்பினர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டை மட்டும் 'தினகரன்' நாளேட்டில் வெளியிட்டு விட்டு அதற்கு அளிக்கப்பட்ட மறுப்பை வெளியிடாதது குறித்து.

திரு. வி. கொ. சின்னசாமி: தலைவர் அவர்களே, 31-3-78ம் தேதி அன்று வெளியிடப்பட்ட தினகரன் பத்திரிகை என்மீது களங்கம் ஏற்படும் வகையிலும், பொதுமக்கள் மத்தியில் கெட்ட பெயர் உண்டாக்கும் நோக்கத்துடன் வேண்டுமென்றே உண்மைக்கு புறம்பான செய்தியை வெளியிட்டுள்ளது. திரு. ஜேம்ஸ் அவாகள் 30-3-78 அன்று பேரவையில் பேசும்போது என்னைப்பற்றிக் கூறிய குற்றச்சாட்டுக்கு நான் மறுத்துக்கூறிய தன்னிலை விளக்கத்தையோ அல்லது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் நிதி அமைச்சர் அவர்களும் குறுக்கிட்டுச் சொன்ன பதிலையோ பிரசுரிக்காது என்மீது சொன்ன குற்றச்சாட்டை மட்டும் வெளியிட்டது தவறாகும். என்மீது களங்கம் சுமத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும். திரு. ஜேம்ஸ் அவர்கள் குற்றம்சாட்டினார், எம். எல். ஏ. அதை மறுக்காது தூங்கிக்கொண்டிருந்தார்கள் என்று அந்தப் பகுதி மக்கள் நினைக்கிற ஒரு நிலைமை வந்துவிடக்கூடாது.